12-12-14 Dinakaran

## மெட்ரோ ரயில் பணிகள் தீவிரம்

# சுரங்கப்பாதையில் தண்டவாளம் அமைக்கும் வேலை தொடக்கம்

### மார்ச்சில் இயக்க திட்டம்



சுரங்கப்பாதையில் தண்டவாளம் அமைக்கும் பணி தொடங்கி உள்ளது.

சென்னை, டிச.12: மெட்ரோ ரயில் செல்வதற்காக, மேம்பாலங்களை தொடர்ந்து சுரங்கப் பாதையிலும் தண்டவாளம் அமைக்கும் பணிகள் தொடங்கியுள் ளது. 2015 மார்ச் மாதம் கோயம்பேடு – ஆலந்தூர் இடையே பயணிகளுக்கான மெட்ரோ ரயில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயிலுக்காக வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரை, சென்ட்ரலில் இருந்து பரங்கிமலை வரை என 45 கிமீ தூரம் ரயில் பாதை அமைக்கப்படுகிறது. இதில், 24 கி.மீ தூரம் சுரங்கப்பாதை. இதற்காக, சுரங்கம் தோண்டும் பணி 2012 ஜூலை 28ம் தேதி நேரு பூங்காவில் தொடங்கியது.

சுரங்கப்பாதையில் 2 வழித்தடங்களிலும் மொத்தம் 36,308 மீட்டர் தூரத்துக்கு (சுமார் 36 கிலோ மீட்டர்) 6 மீட்டர் விட்டத்தில் சுரங்கம் தோண்டும் பணி நடந்து வருகிறது. இதுவரை 25 கி.மீ. தூரம் (67 சதவீதம்) சுரங்கம் தோண்டும் பணிகள் முடிந்துள்ளன.

இந்நிலையில், கோயம்பேடு – ஆலந்தூர் இடையே உயர்த்தப்பட்ட (மேம்பாலம்) பாதையில் 10 கி.மீ. தூரம் பயணிகள் மெட்ரோ ரயில் சேவையை 2015 மார்ச் மாதம் முதல் இயக்க திட்டமிட்டு பணிகள் நடந்து வருகிறது. இதற்காக, 4 பெட்டிகளை கொண்ட 17 ரயில்கள் தயார் நிலையில் கோயம்பேடு பணிமனையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தற்போது, மேம்பாலத்தை தொடர்ந்து சுரங்கப்பாதையிலும் தண்டவாளம் அமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளது.

இதுகுறித்து, மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி கூறியதாவது:

சென்னையில், சுரங்கப் பாதையில் இதுவரை 67 சதவீதம் பணிகள் முடிவடைந்துள்ளது. ஷெனாய் நகர் – திருமங்கலம் இடையே 2,797 மீட்டர் தூரத்துக்கு முதல் பாதையில் சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. இரண்டாவது பாதையில் இன்னும் ஒரு சில தினங்களில் சுரங்கம் தோண்டும் பணி முடிவடையும். இந்த வழித்தடத்தில் சுரங்கம் தோண்டும் பணி முடிவடைந்ததால், ஷெனாய்நகரில் இருந்து சுரங்கப்பாதை வழியாக திருமங்கலம் வரையும், அங்கிருந்து சாய்வு தளம் (ரம்ப்) மூலம் மெட்ரோ ரயில் கோயம்பேடு மேம்பால ரயில் நிலையத்துடன் இணைந்து விடும்.

ஷெனாய்நகர் – திருமங்கலம் இடையே சுரங்கம் தோண்டும் பணி சுமார் 3 கி.மீ. நீளத்துக்கு முடிந்துள்ளதால், சுரங்கப்பாதையிலும் தண்டவாளம் போடும் பணி துவங்கியுள்ளது. முதல்கட்டமாக, திருமங்கலம் சாய்வு தளத்தில் இருந்து தண்டவாளம் போடும் பணி துவங்கி, திருமங்கலம், அண்ணாநகர் டவர், அண்ணாநகர் கிழக்கு, ஷெனாய்நகர் ஆகிய ரயில் நிலையங்கள் இடையே தண்டவாளம் அமைக்கப்படும். 2015ம் ஆண்டு இறுதிக்குள் சுரங்கப்பாதை முழுவதும் (36 கி.மீ. நீளத்துக்கு) தண்டவாளம் போடும் பணி நிறைவடைய வாய்ப்புள்ளது.

தற்போது, கோயம்பேடு – ஆலந்தூர் இடையே மேம்பாலத்தில் தண்டவாளம், சிக்னல் மற்றும் தொழில்நுட்ப பணிகள் முடிவடைந்துள்ளன. ரயில் நிலையங்களின் கட்டுமான பணிகளும் நிறைவடையும் நிலையில் உள்ளன. ஜனவரி அல்லது பிப்ரவரி மாதம் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் சோதனை ஓட்டம் செய்து, பயணிகள் ரயிலுக்கு அனுமதி வழங்குவார். இதையடுத்து 2015ம் ஆண்டு மார்ச் மாதம், முதல்கட்டமாக கோயம்பேடு – ஆலந்தூர் இடையே மெட்ரோ ரயில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. பயணிகளுக்கான ரயில் கட்டணம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ரயில் இயக்குவதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியான பிறகே பயணிகள் கட்டணம் குறித்த அறிவிப்பை தமிழக அரசு வெளியிடும். இவ்வாறு அவர் கூறினார்.